(ஏழாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. 13(10).] **பாராளுமன்றம்**

## 13 ஆம் ஒழுங்குப் புத்தகத்துக்கான அனுபந்தம்

## 2015 மாச்சு 20 வெள்ளிக்கிழமை வெளியிடப்பட்டது

---

## 2015 ஏப்பிறல் 07, செவ்வாய்க்கிழமை

## பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*

காணி அமைச்சர்,— உரித்துப் பதிவுச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 1998 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க உரித்துப் பதிவுச் சட்டத்தின் 67 ஆம் பிரிவின் கீழ் காணி, காணி அபிவிருத்தி அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2014 ஒற்றோபர் 31 ஆந் திகதிய 1886/58 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2015.03.17 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.

---

## 2015 ஏப்பிறல் 21, செவ்வாய்க்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

4399/ ’13

கௌரவ புத்திக பதிரண,— மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) கண்டி மாவட்ட வன உத்தியோகத்தர் பிரிவு அலுவலகங்களினால் நிருவகிக்கப்படும் காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவுக்குச் சொந்தமான காணிகளின் அளவு யாதென்பதையும்;

(ii) குறித்த காணிகளில் வன பாதுகாப்புத் திணைக்களத்தினால் பைனஸ் மற்றும் ஏனைய வனப் பயிர்ச்செய்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளமையை அறிவாரா என்பதையும்;

(iii) அவ்வாறு பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ள காணிகளின் அளவு யாதென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) வன பாதுகாப்புத் திணைக்களத்தினால் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ள காணிகளை தனிநபர்கள் அனுமதியின்றி கைப்பற்றி உள்ளார்கள் என்பதையும்;

(ii) குறித்த காணிகளில் ஒரு பகுதியை அரசாங்கம் பொது மக்களுக்கு வழங்கியுள்ளதையும்

அவர் அறிவாரா?

(இ) (i) மேலே (அ) (iii) இல் குறிப்பிடப்பட்டுள்ள வனப் பிரதேசத்தில், தனிநபர்கள் அனுமதியின்றிக் குடியமர்ந்துள்ள காணியின் அளவு மற்றும் அரசாங்கத்தினால் பொது மக்களுக்கு வழங்கப்பட்டுள்ள காணியின் அளவு வெவ்வேறாக யாதென்பதையும்;

(ii) ஒதுக்கு வனப் பிரதேசங்கள், மேலே கூறப்பட்டுள்ளவாறு மனிதனின் தேவைக்காக பயன்படுத்தப்படுவதால் நீரேந்து பிரதேசங்கள் அழிந்துவிடுமென்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(iii) ஆமெனில், இந்த நிலைமையைத் தடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

4773/ '14

கௌரவ அசோக் அபேசிங்க,— சுகாதார மற்றும் சுதேச மருத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) வைத்தியசாலைகளில் மருந்துகள் பற்றாக்குறைக்கு தீர்வாக பிரதேச ரீதியில் மருந்துகளைக் கொள்வனவு செய்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதா;

(ii) அதற்காக விலை மனுக்கள் பெறப்படுகின்ற முறை யாது;

(iii) மேற்படி விலை மனுக்களை மருத்துவ வழங்கல் பிரிவுடன் ஒப்பிட்டுப் பார்ப்பதற்கான வேலைத்திட்டமொன்று உள்ளதா;

(iv) பேராதனை பொது வைத்தியசாலையில் மருந்துகளை கொள்வனவு செய்கின்றபோது நேரிட்டுள்ள மோசடிகள் தொடர்பாக அமைச்சு அறிந்துள்ளதா

என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

5245/ '14

கௌரவ அஜித் மான்னப்பெரும,— நிதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 1995.10.11 ஆம் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்பட்ட விவசாய ஓய்வூதியத்திட்டத்திற்குரிய புதிய வேலைத்திட்டத்தின் பிரகாரம் குறிப்பிட்ட சம்பளத்தைப் பெற்றுக்கொண்டிருக்கும் போது மரணித்த ஒருவரின் வாழ்க்கைத் துணைக்கு அல்லது தங்கிவாழ்வோருக்கு உரித்தான மாதாந்த ஓய்வூதியத்தை 2014.01.01 ஆம் திகதி தொடக்கம் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(ii) இன்றேல், அதற்கான காரணம் யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) 2014.01.01 ஆம் திகதி தொடக்கம் ஆரம்பிக்கப்பட்ட புதிய வேலைத்திட்டத்தின் படி, 1987 ஆம் ஆண்டு அப்போது இருபத்தேழு வயதினைக் கொண்டிருக்கும் போது ஒரே தடவையில் ரூபா 3400/- ஐ செலுத்தி விவசாய ஓய்வூதிய உரித்தினைப் பெற்றுக்கொண்ட ஒருவர், 2010 ஆம் ஆண்டில் அப்போது நாற்பத்தைந்து வயதினைக் கொண்டிருந்தபோது ஒரே தடவையில் ரூபா 5740/- ஐ செலுத்தி அதற்கு பங்களிப்பு நல்கிய ஒருவர் மற்றும் 1987 ஆம் ஆண்டு இருபத்தேழு வயதினைக் கொண்டிருக்கும்போது விவசாய ஓய்வூதியத்திற்காக அரையாண்டுத் தவணைத் தொகையாக ரூபா 175/- ஐ செலுத்திக்கொண்டிருந்த ஒருவர் ஆகியோர் அவர்களது ஓய்வூதியத்திற்கான உரித்தினைப் பெற்றுக்கொள்ளும் பொருட்டு மேலதிக தொகையொன்றைச் செலுத்த வேண்டுமா என்பதையும்;

(ii) ஆமெனில், மேலே குறிப்பிடப்பட்ட ஒவ்வொரு சந்தர்ப்பத்திற்கும் ஏற்புடையதாக குறித்த நபர்களால் செலுத்தப்பட வேண்டிய பணத் தொகை வெவ்வேறாக எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

5870/ '15

கௌரவ சாந்த பண்டார,— நிதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையினுள் கெசினோ சூதாட்டத் தொழில்முயற்சி கொண்டுநடாத்தப் படுகின்றமையை அறிவாரா என்பதையும்;

(ii) மேற்படி கெசினோ சூதாட்டத் தொழில்முயற்சி ஆரம்பிக்கப்பட்ட காலகட்டம் யாதென்பதையும்;

(iii) இன்றளவில் இந்நாட்டிலுள்ள கெசினோ தொழில்முயற்சி நிலையங்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(iv) மேற்படி தொழில்முயற்சி நிலையங்கள் கொண்டுநடாத்தப்படுவதன் அடிப்படை யாதென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

5899/ '15

கௌரவ லஸந்த அலகியவன்ன,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு கல்விக்காக ஒதுக்கப்பட்ட பணத்தொகை எத்தனை மில்லியன் ரூபா என்பதையும்;

(ii) மேற்படி பணத்தொகை, மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக எவ்வளவு என்பதையும்;

(iii) மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 6% ஐ கல்விக்காக ஒதுக்க இயலுமாகின்ற ஆண்டு யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

5916/ '15

கௌரவ சுசந்த புஞ்சிநிலமே,— மக்கள் ஒழுங்கு, அனர்த்த முகாமை மற்றும் கிறித்தவ சமய அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015.01.08ஆம் திகதி இடம்பெற்ற சனாதிபதித் தேர்தலின் பின்னர் அரசியல் அல்லது வேறு ஏதேனும் காரணங்களுக்காக பொலிஸ் அல்லது ஏனைய பாதுகாப்பு பிரிவுகளினால் சோதனைக்கு உட்படுத்தப்பட்ட கத்தோலிக்க ஆலயங்கள், இந்து சமயத் தலங்கள் மற்றும் முஸ்லிம் பள்ளிவாசல்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாது;

(ii) மேற்படி ஒவ்வொரு சோதனை நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டுள்ள குறித்த சமயத் தலத்தின் பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம், சோதனைக்கு உட்படுத்தப்பட்ட திகதி மற்றும் அதற்கு ஏதுவான காரணங்கள் ஆகியன கத்தோலிக்க, இந்து மற்றும் முஸ்லிம் சமயத் தலங்களுக்கு அமைய வெவ்வேறாக யாவை

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4534/ '13

கௌரவ புத்திக பதிரண,— நிதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 1980 யூலை வேலைநிறுத்தத்தின்போது தொழிலை இழந்தவர்களில் இற்றைவரை நிவாரணம் எதுவும் கிடைக்காதவர்களுக்கு ரூபா 5000.00 கொடுப்பனவொன்று வழங்கப்படுமென்ற 2013 வரவு செலவு திட்ட முன்மொழிவின்படி இற்றைவரை இக்கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளவர்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) மேற்படி கொடுப்பனவை செலுத்துவதற்காக அரசாங்கத்தினால் இற்றைவரை செலவிடப்பட்டுள்ள பணத்தொகை யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி (அ)(i) இல் குறிப்பிடப்பட்டுள்ள முன்மொழிவை நடைமுறைப்படுத்த ஆரம்பிக்கின்றபோது எவ்வித நலனும் பெறாது மரணித்த யூலை வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டவர்களுக்குரிய மேற்படி நன்மைகளை சம்பந்தப்பட்ட உரிமையாளர்களுக்கு பெற்றுக்கொடுத்தல் தொடர்பில் பின்பற்றப்படும் முறையியல் யாதென்பதையும்;

(ii) 1980 யூலை வேலைநிறுத்தத்தில் பங்கேற்று இற்றைவரை நிவாரணம் பெற்றுக்கொள்ளாத எவரேனுமொருவர் மேற்படி பணத்தொகையை பெற்றுக்கொள்வதற்காக பின்பற்ற வேண்டிய முறையியல் யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

4778/ '14

கௌரவ அசோக் அபேசிங்ஹ,— சுகாதார மற்றும் சுதேச மருத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) சுகாதார மற்றும் சுதேச மருத்துவ அமைச்சின் கீழ் உள்ள மொத்த வைத்தியசாலைகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மாகாண சபைகளின் கீழ் உள்ள வைத்தியசாலைகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) 2012 வரவு செலவுத் திட்டத்தின் மூலம் மாகாண சபைகளின் கீழ் இயங்கும் வைத்தியசாலைகளின் தரத்தை விருத்தி செய்வதற்கான நிகழ்ச்சித்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளனவா என்பதையும்;

(iv) மேற்படி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ், மாகாண சபைகளின் மூலம் பிரதேச வைத்தியசாலைகளுக்கு அவசியமற்ற உபகரணங்கள் விநியோகிக்கப்பட்டிருந்தன என்பதை அறிவாரா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) மேற்படி (அ) (iii) இல் குறிப்பிடப்பட்டுள்ள நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் மாகாண சபை வைத்தியசாலைகளுக்கென ஒதுக்கப்பட்ட பணத் தொகை ஒவ்வொரு மாகாண சபை வாரியாக வெவ்வேறாக எவ்வளவு என்பதை அவர் சபையில் சமர்ப்பிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

5575/ ’14

கௌரவ அஜித் மான்னப்பெரும,— சுகாதார மற்றும் சுதேச மருத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தற்போது அமுலிலுள்ள ஆயுர்வேத சட்டம் அறிமுகப்படுத்தப்பட்ட ஆண்டு யாதென்பதையும்;

(ii) தற்போது மேற்படி சட்டம் திருத்தப்பட்டுள்ள தவணைகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(iii) இது இறுதியாக திருத்தப்பட்ட ஆண்டு யாதென்பதையும்;

(iv) இற்றைவரை இச்சட்டம் திருத்தப்படவில்லையெனில், அதற்கான காரணம் யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) ஆயுர்வேத மருத்துவ பட்டதாரிகள், மருத்துவ உத்தியோகத்தர் என்ற பெயரிலா இன்றேல் மருத்துவ நிபுணர்கள் என்ற பெயரிலா அழைக்கப்படுகின்றார்கள் என்பதையும்;

(ii) இவர்களை இப்பெயரில் அழைப்பதற்கான காரணம் யாதென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

5871/ ’15

கௌரவ சாந்த பண்டார,— நிதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 100 நாள் வேலைத்திட்டத்தின் கீழ் மக்களுக்கு பெருமளவு நிவாரணங்கள் வழங்கப்பட்டதென்பதையும்;

(ii) அதற்காக மேலதிக செலவினத்தை மேற்கொள்ள வேண்டியிருந்ததென்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேலே குறிப்பிடப்பட்ட மேலதிக செலவினத்தை ஏற்பதற்காக 2014 ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட வரவு செலவு திட்ட முன்மொழிவுகளை மாற்றுவதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(ii) இன்றேல், மேலதிக நிதியை ஈட்டிக்கொள்வதற்கு மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

4538/ '13

கௌரவ புத்திக பதிரண,— வெளிநாட்டு தொழில்வாய்ப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,—(2)

(அ) (i) 2013 ஆம் ஆண்டு வரவுசெலவு திட்டத்தின் மூலம் வெளிநாட்டு வேலைவாய்ப்புக்காக செல்லும் இலங்கையர்களின் திறன்களை உயர் மட்டத்திற்குக் கொண்டுவரும் பொருட்டும் அந்நாடுகளின் சமூக, கலாச்சார சூழலுக்கு இயைபாக்கம் அடைவதை இலகுபடுத்துவதற்குமான விசேட பாடநெறிகளைக் கொண்ட புதிய வெளிநாட்டு வேலைவாய்ப்பு தொழில்நுட்ப கல்லூரிகள் இரண்டினை நிறுவுவதற்கு பிரேரிக்கப்பட்டதென்பதை அறிவாரா;

(ii) மேற்படி இரண்டு கல்லூரிகளும் நிறுவப்பட்டுள்ள இடங்கள் யாவையென்பதையும்;

(iii) இதற்காக முதலீடு செய்யப்பட்டுள்ள மொத்த பணத்தொகை எவ்வளவென்பதையும்;

(iv) மேற்படி தொழில்நுட்பக் கல்லூரிகளில் பயிற்சியளிக்கப்படுகின்ற தொழில்துறைகள் யாவையென்பதையும்;

(v) தற்போது மேற்படி நிறுவனங்களிலிருந்து பயிற்சிகளைப் பெற்று வெளிநாட்டு தொழில்களுக்காக சென்றுள்ள வெளிநாட்டுத் தொழில்புரியும் வீரர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4781/ '14

கௌரவ அசோக் அபேசிங்க,— சுகாதார மற்றும் சுதேச மருத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,—(2)

(அ) (i) தற்போது நாட்டினுள் மருந்து விலைக் கட்டுப்பாடொன்று நடைமுறையில் உள்ளதா என்பதையும்;

(ii) சில காலங்களுக்கு முன்னர் இலங்கையில் மருந்து விலைக் கட்டுப்பாடொன்று நடைமுறையிலிருந்ததென்பதை அறிவாரா என்பதையும்;

(iii) ஆமெனில், மேற்படி விலைக் கட்டுப்பாடு நடைமுறையில் இருந்த காலகட்டம் யாதென்பதையும்;

(iv) மேற்படி காலகட்டத்தினுள் கட்டுப்பாட்டு விலையை கொண்டிருந்த மருந்து வகைகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(v) மருந்து விலைக் கட்டுப்பாட்டுக்காக நியமிக்கப்பட்டுள்ள குழு தற்போது அதற்கு ஏற்புடையதான விதப்புரைகளை வழங்கியுள்ளதா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

5576/ '14

கௌரவ அஜித் மான்னப்பெரும,— சுகாதார மற்றும் சுதேச மருத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2012 ஆம் ஆண்டு பட்டதாரிகளுக்கு தொழில்வாய்ப்பினை பெற்றுக்கொடுப்பதற்காக விண்ணப்பங்கள் கோரப்பட்ட சந்தர்ப்பத்தில் அதற்காக விண்ணப்பித்திருந்த ஆயுர்வேத மருத்துவ பட்டதாரிகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) இவர்களில் தொழில் வாய்ப்பு வழங்கப்பட்டவர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) 2011.12.31 ஆம் திகதியாகின்றபோது தொழில்வாய்ப்பற்றிருந்த ஆயுர்வேத மருத்துவ பட்டதாரிகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) 2012 ஆம் ஆண்டில் இவர்களுக்கு தொழில் வாய்ப்பு வழங்குவதற்கு வேலைத்திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருந்ததா என்பதையும்;

(iii) ஆமெனில், அந்த வேலைத்திட்டம் யாதென்பதையும்;

(iv) அதன் கீழ் தொழில் வாய்ப்பு வழங்கப்பட்ட ஆயுர்வேத மருத்துவர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

5872/ '15

கௌரவ சாந்த பண்டார,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) எமது நாட்டின் கிராமிய கல்வி முறைமையை மேம்படுத்துவதற்காக இரண்டாம் நிலை பாடசாலைகள் நிகழ்ச்சித்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்பதையும்;

(ii) மேற்படி நிகழ்ச்சித்திட்டத்தில் உள்ளடக்கப்படுவதற்கு தகைமையிருந்த போதிலும் சில பாடசாலைகள் இதில் உள்ளடங்கவில்லையென்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) குளி/நக்காவத்தை மஹிந்த மத்திய மகா வித்தியாலயம் மற்றும் குளி/ வீரபொக்குன மகா வித்தியாலயம் ஆகியவற்றை இரண்டாம் நிலை பாடசாலைகள் நிகழ்ச்சித்திட்டத்தில் உள்ளடக்கப்படவேண்டிய பாடசாலைகளாக கவனத்திற்கொள்வாரா என்பதையும்:

(ii) ஆமெனில், மேற்படி இரண்டு பாடசாலைகளிலும் கல்வி கற்கும் மாணவர்களுக்கு நிகழ்ந்துள்ள அநீதியை போக்கி மேற்படி இரண்டு பாடசாலைகளையும் இரண்டாம் நிலை பாடசாலைகள் நிகழ்ச்சித்திட்டத்தில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

5913/ ’15

கௌரவ (பேராசிரியர்) திஸ்ஸ விதாரண,— பிரதம அமைச்சரும், கொள்கை உருவாக்கம், பொருளாதார அலுவல்கள், சிறுவர், இளைஞர் மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பொருளாதார அபிவிருத்தி, உற்பத்தித்திறன் ஊக்குவிப்பு உள்ளிட்ட அப்போதிருந்த பல அமைச்சுக்களை இரத்துச்செய்து அந்த அமைச்சுகளில் பணியாற்றிய அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் ஆற்றிய பணிகள் இடைநிறுத்தப்பட்டுள்ளதென்பதையும்;

(ii) ஆகவே, அவ்வாறான ஆயிரக்கணக்கான உத்தியோகத்தர்கள் தற்போது எவ்வித கடமைப்பணிகளும் இல்லாதிருக்கின்றார்கள் என்பதையும்;

(iii) இவர்களுக்கு அலுவலகங்களை பேணிவருவதற்கு அரசினால் வழங்கப்பட்ட கொடுப்பனவுகளும் தற்போது இரத்துச்செய்யப்பட்டுள்ளதென்பதையும்;

(iv) இதன் விளைவாக குத்தகை அடிப்படையில் பயன்படுத்தப்பட்ட அலுவலகக் கட்டிடங்களிலிருந்து வெளியேறவேண்டி நேரிட்டுள்ளதென்பதையும்;

(v) இதன் விளைவாக மேற்படி அலுவலகங்களுக்கு வழங்கப்பட்டிருந்த அரச ஆதனங்கள் பாதுகாப்பற்ற நிலைக்கு உள்ளாகியுள்ளதென்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி (அ) இல் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பாக மேற்கொள்ளப்படும் நடவடிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி அமைச்சுகளில் தற்போது பணியாற்றுகின்ற அபிவிருத்தி உத்தியோகத்தர்களையும் ஆட்சேர்க்கப்பட்ட பட்டதாரிகளையும் முறைசார்ந்த விதத்தில் அரச சேவைக்கு உள்ளீர்த்து பதவியுயர்வு முறைமையொன்றை அறிமுகப்படுத்துவதாக 100 நாள் வேலைத்திட்டத்தில் வழங்கப்பட்டுள்ள வாக்குறுதிக்கேற்ப அவ்வுத்தியோகத்தர்களை 100 நாட்களுக்குள் பயனுறுதிமிக்க பணியில் ஈடுபடுத்துவாரா என்பதையும்;

(iii) ஆமெனில், அத்தேதி யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

## 2015 ஏப்பிறல் 22, புதன்கிழமை
## வாய்மூல விடைக்கான வினாக்கள்

4589/ '13

கௌரவ புத்திக பதிரண,— வெளிநாட்டு தொழில்வாய்ப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) வெளிநாடுகளில் தொழில்புரியும் வீரர்களுக்கு ஓய்வூதியமொன்றை வழங்குவதற்காக 2010 சனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் வாக்குறுதி அளிக்கப்பட்டுள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) ஆமெனில், வெளிநாட்டுத் தொழில்புரியும் வீரர்களுக்கு ஓய்வூதியம் வழங்குவதற்காக கடைப்பிடிக்கப்படும் முறையியல் யாதென்பதையும்;

(ii) வெளிநாட்டுத் தொழில்புரியும் வீரர்களுக்கு ஓய்வூதியம் வழங்குகின்றபோது வெளிநாட்டுத் தொழில்புரியும் வீரர்களால், தொழில் நிறுவனத்தினால் மற்றும் அரசாங்கத்தினால் பங்களிப்புச் செய்யப்படும் விதம் தனித்தனியாக யாதென்பதையும்;

(iii) மேற்படி ஓய்வூதியமாக மாதாந்தம் வழங்குவதற்கு எதிர்ப்பார்க்கின்ற பணத் தொகை யாதென்பதையும்;

(iv) வெளிநாட்டுத் தொழில்களில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு ஓய்வூதியம் வழங்கும் உலகின் ஏனைய நாடுகள் யாவை என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

4783/ '14

கௌரவ அசோக் அபேசிங்க,— சுற்றுலா மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சரிடம் கேட்பதற்கு,— (2)

(அ) 2005 முதல் 2013 ஆம் ஆண்டு வரையிலான காலகட்டத்தினுள்,

(i) குருணாகல் மாவட்டத்தில் காட்டு யானைகளின் தாக்குதலினால் மரணித்த ஆட்களின் எண்ணிக்கை;

(ii) மனித செயற்பாடுகளின் காரணமாக மேற்படி மாவட்டத்தினுள் உயிரிழந்த யானைகளின் எண்ணிக்கை;

(iii) நாடு முழுவதிலும் உயிரிழந்த காட்டு யானைகளின் எண்ணிக்கை

வருடாந்தம் வெவ்வேறாக எவ்வளவு என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

5873/ '15

கௌரவ சாந்த பண்டார,— வெளிநாட்டு தொழில் வாய்ப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வெளிநாட்டுத் தொழில்களில் ஈடுபட்டுள்ளவர்களிடமிருந்து வருடாந்தம் பெரும் தொகை வெளிநாட்டுச் செலாவணி எமது நாட்டுக்குக் கிடைக்கின்றதென்பதையும்;

(ii) தற்போது இலங்கையர்கள் கொரியாவில் தொழில்களில் ஈடுபட்டுள்ளார்கள் என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) 2015 ஆம் ஆண்டில் இந்நாட்டு ஊழியர்களுக்கு கொரியாவில் தொழில் வாய்ப்புக்கள் கிடைத்துள்ளனவா என்பதையும்;

(ii) ஆமெனில், அத்தொழில் வாய்ப்புக்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(iii) மேற்படி தொழில் வாய்ப்புக்கள் இதுவரை கிடைக்கப்பெறவில்லையெனில் அந்த வாய்ப்புக்களைப் பெற்றுக்கொள்வதற்கு துரிதமாக நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

4784/ '14

கௌரவ அசோக் அபேசிங்க,— சுற்றுலா மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) நாட்டினுள் காட்டு யானைகளினால் ஏற்படும் மனித உயிரிழப்புக்களின் எண்ணிக்கையைக் குறைப்பதற்காக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(ii) காட்டு யானைகளிடமிருந்து பாதுகாப்புப் பெறுவதற்காக நாடு பூராகவும் தேவைப்பட்டுள்ள மின் வேலிகளின் (யானைகளிடமிருந்து பாதுகாப்புப் பெறுவதற்கான வேலிகள்) நீளம் குறித்து அறிவீர்களா என்பதையும்;

(iii) ஆமெனில், மேற்படி தேவைப்பாடு யாது என்பதையும்;

(iv) குருணாகல் மாவட்டத்துக்குத் தேவையான மின் வேலிகளின் நீளம் யாது என்பதையும்;

(v) மின் வேலிகளை அமைப்பதற்கு இந்தமுறை வரவு – செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கப்பட்டுள்ளதா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4813/ '14

கௌரவ புத்திக பதிரண,— உள்ளகப் போக்குவரத்து அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இலங்கை முதலீட்டுச் சபையின் கீழ் பதிவு செய்யப்பட்டு தற்போது சுதந்திர வர்த்தக வலயத்தில் வாகனங்களை பொருத்தி விற்பனை செய்யும் தொழில்முயற்சியொன்றை நடத்திவரும் வ/ப வெஹிகல்ஸ் லங்கா தனியார் நிறுவனத்தினால் விற்பனை செய்யப்படும் மோட்டார் வாகனங்கள் ஒரு மாதத்தினுள் பதிவு செய்யப்படுமென மோட்டார் போக்குவரத்து ஆணையாளரினால் வழங்கப்பட்ட கடிதமொன்று கொள்வனவாளர்களுக்கு காண்பிக்கப்படுகின்றது என்பதையும்;

(ii) எனினும், மேற்படி நிறுவனத்தினால் விற்பனை செய்யப்பட்ட வாகனங்கள் பதிவு செய்யப்படுவதை மோட்டார் போக்குவரத்து திணைக்களம் நிராகரிக்கின்றதென்பதையும்;

(iii) இதனால், மேற்படி நிறுவனத்திலிருந்து மோட்டார் வாகனங்களை கொள்வனவு செய்துள்ள பெரும் எண்ணிக்கையான வாடிக்கையாளர்கள் தமது வாகனங்களை செலுத்த முடியாது கடும் அசௌகரியங்களுக்கு உள்ளாகியுள்ளனர் என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) வ/ப வெஹிகல்ஸ் லங்கா தனியார் நிறுவனத்திலிருந்து கொள்வனவு செய்யப்பட்ட வாகனங்களை, மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தில் பதிவு செய்வதற்கான வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பாரா என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

5874/ '15

கௌரவ சாந்த பண்டார,— நீதி மற்றும் தொழில் உறவுகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) எமது நாட்டின் நீதிமன்ற முறைமை தொடர்பில் மக்களுக்கு மத்தியில் பெரும் நம்பிக்கை காணப்படுகின்றதென்பதையும்;

(ii) பல்வேறுபட்ட பாதிப்புகளுக்கு உள்ளான மக்கள் நீதிமன்றத்தின் உதவியை நாடுகின்றார்கள் என்பதையும்;

(iii) சில நீதிமன்றச் செயற்பாடுகள் பெரிதும் தாமதமடைவதனால் மக்கள் பெரும் அழுத்தத்திற்கு உள்ளாகியுள்ளனர் என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) நீதிமன்றச் செயற்பாடுகளில் ஏற்படுகின்ற தாமதங்களைக் குறைத்து மக்களுக்கு நிவாரணத்தைப் பெற்றுக்கொடுப்பதற்கு துரித நடவடிக்கைகளை மேற்கொள்வாரா என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

4819/ '14

கௌரவ புத்திக பதிரண,— பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இலங்கை விமானப் படையினால் வாடகை அடிப்படையில் பெறப்பட்ட குளிரூட்டப்பட்ட சொகுசு வாகனங்கள் விமானப் படையின் சிரேஷ்ட அதிகாரிகளின் தனிப்பட்ட பாவனைக்காக பயன்படுத்தப்படுகின்றன என்பதையும்;

(ii) இவ்வாகனங்களுக்கான எரிபொருள் அரசாங்கத்திலிருந்து பெறப்படுகின்றது என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) வாடகை அடிப்படையில் பெறப்பட்ட சொகுசு வாகனங்களை சிரேஷ்ட அதிகாரிகளின் தனிப்பட்ட பாவனைக்குப் பயன்படுத்துவதற்கு இலங்கை விமானப் படையினதும் பாதுகாப்பு அமைச்சினதும் இணக்கப்பாடு பெறப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) இன்றேல், மேற்படி வாகனப் பாவனை தொடர்பாக விசாரணை மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) அவ்விசாரணையின் பெறுபேறு யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

5223/ '14

கௌரவ அசோக் அபேசிங்ஹ,— நிதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) இலங்கையில் உரிமம் பெற்ற மொத்த வங்கிகளின் எண்ணிக்கை யாதென்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி ஒவ்வொரு வங்கியினதும் சொத்துக்களின் அளவு தனித்தனியாக யாதென்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு வங்கியின் மூலமும் அரசாங்கத்திற்கு வழங்கப்பட்டுள்ள கடன் தொகை தனித்தனியாக யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) மேற்படி வங்கிகளின் மூலம் அரசாங்கத்திற்கு வழங்கப்பட்டுள்ள கடன்களை மீள அறவிடுவதற்கான முறையியலொன்று காணப்படுகிறதா என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

5880/ '15

கௌரவ சாந்த பண்டார,— மகளிர் அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) கர்ப்பிணித் தாய்மார்களுக்கு ரூபா 20,000 உதவித் தொகையை பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளமையை அவர் அறிவாரா?

(ஆ) (i) ஒரு வருடத்தினுள் இலங்கையில் அண்ணளவாக இடம்பெறுகின்ற குழந்தைப் பிரசவங்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(ii) 2015 ஆம் ஆண்டில் மேலே குறிப்பிடப்பட்ட கர்ப்பிணித் தாய்மார்களுக்கு உதவி வழங்குவதற்காக ஒதுக்கப்பட்டுள்ள பணத் தொகை எவ்வளவென்பதையும்;

(iii) உதவி வழங்குவதற்காக கர்ப்பிணித் தாய்மார்களைத் தெரிவு செய்யும் முறையியல் யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

5934/ '15

கௌரவ காமிணீ விஜித் விஜயமுனி சொய்சா,— புத்தசாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கதிர்காம கோயிலுக்குச் சொந்தமான காணியின் பரப்பளவு எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி காணிகள் தனியாட்களுக்கு அல்லது கம்பனிகளுக்கு தவணைக் குத்தகை முறையின் கீழ் அல்லது வேறு முறைகளின் கீழ் வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) அவ்வாறு வழங்கப்பட்டிருப்பின், காணி வழங்கப்பட்டுள்ள ஒவ்வொரு ஆளினதும் அல்லது கம்பனியினதும் பெயர் மற்றும் குறித்த காணியின் அளவு தனித்தனியாக உள்ளடக்கப்பட்ட பட்டியலொன்றை சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(iv) மேலே குறிப்பிடப்பட்ட காணி வழங்குதலானது கோயில் உடமைகள் கட்டளைச் சட்டத்தின் கீழ் வெளிப்படைத்தன்மையுடன் கூடியதாக நடைபெற்றுள்ளதா என்பதையும்;

(v) இன்றேல், அது தொடர்பாக மேற்கொள்ளப்படும் நடவடிக்கை யாதென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

# 2015 ஏப்பிறல் 23, வியாழக்கிழமை
# வாய்மூல விடைக்கான வினாக்கள்

4987/ '14

கௌரவ புத்திக பதிரண,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2013 ஆம் ஆண்டில் க.பொ.த. ( சாதாரண தர ) பரீட்சையை நடாத்துவதற்காக,

(i) தாபிக்கப்பட்ட நிலையங்கள்;

(ii) அந்த நிலையங்களின் இணைப்பாக்கத்திற்காக இயங்கிய இணைப்பாக்க நிலையங்கள்;

(iii) சேவையில் ஈடுபடுத்தப்பட்ட பரீட்சை நிலைய அதிபர்கள்;

(iv) ஈடுபடுத்தப்பட்ட ஆசிரியர்கள்;

(v) ஈடுபடுத்தப்பட்ட மண்டப அலுவலக உதவியாளர்கள்

எண்ணிக்கை எவ்வளவென்பதை வெவ்வேறாக அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) மேற்படி (அ) (v) இல் குறிப்பிடப்பட்ட மண்டப அலுவலக உதவியாளர்களின் பெயர்கள், முகவரிகள் மற்றும் தொலைபேசி இலக்கங்கள் யாவையென்பதை வெவ்வேறாக அவர் சபாபீடத்தில் சமர்ப்பிப்பாரா?

(இ) (i) மேலே பெயர்கள் குறிப்பிடப்பட்ட மண்டப அலுவலக உதவியாளர்களில் கல்வித்துறை சார்ந்த ஊழியர்களின் எண்ணிக்கை மற்றும் அத்துறை சாராத ஊழியர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக எவ்வளவு;

(ii) மேற்படி பரீட்சையின் பணிகளுக்காக வெளிவாரியாக ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட மண்டப அலுவலக உதவியாளர்களின் வேதனம் மற்றும் படிகளுக்காக செலுத்தப்பட்ட பணத்தொகை எவ்வளவு

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) (i) கல்வித்துறை கல்விசாரா ஊழியர்கள் இருக்கின்றவேளையில் வெளியாட்களைப் பரீட்சை அலுவல்களில் ஈடுபடுத்துவதால் அந்த ஊழியர்களுக்கு கொடுப்பனவொன்றை பெற்றுக்கொள்வதற்காக உள்ள வாய்ப்பு அற்றுப்போவதைத் தடுக்க நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(ii) ஆமெனில், அது எவ்வாறு என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?

5224/ '14

கௌரவ அசோக் அபேசிங்க,— வீடமைப்பு மற்றும் சமுர்த்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) குருணாகல் மாவட்டத்தில் அமைந்துள்ள வீடுகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி மாவட்டத்தில் அமைந்துள்ள சேரி வீடுகள் மற்றும் லயன் அறைகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(iii) மாவட்டத்தில் உள்ள வீடுகளற்ற குடும்பங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) குருணாகல் மாவட்டத்தில் மலசலகூடங்கள் இல்லாத வீடுகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) மலசலகூடங்கள் இல்லாத வீடுகளுக்கு மலசலகூடங்களை வழங்கும் முறையியல் யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

5881/ '15

கௌரவ சாந்த பண்டார,— சுற்றுலா, விளையாட்டுத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) 2015 ஆம் ஆண்டுக்கு ஏற்புடையதாக கிரிக்கட் கட்டுப்பாட்டுச் சபையொன்று நியமிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) அதற்காக உத்தியோகத்தர் தெரிவு இடம்பெற்றுள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனில், மேற்படி உத்தியோகத்தர் தெரிவு நடத்தப்பட்ட திகதி யாதென்பதையும்;

(iv) மேற்படி உத்தியோகத்தர் தெரிவின்போது நியமனம் பெற்ற உத்தியோகத்தர்கள் யாவர் என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4999/ '14

கௌரவ புத்திக பத்திரண,— பிரதம அமைச்சரும் கொள்கை உருவாக்கம், பொருளாதார அலுவல்கள், சிறுவர், இளைஞர் மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) மாவட்ட செயலாளர்களுக்கும் பிரதேச செயலாளர்களுக்கும் முறையே ரூபா 15000/=, ரூபா 5000/= மற்றும் மாவட்ட செயலகங்களுக்கு இணைக்கப்பட்டுள்ள திட்டமிடல் பணிப்பாளர்கள் மற்றும் தலைமை கணக்காளர்களுக்கு ரூபா 3000/= என்றவாறு ஊக்குவிப்புக் கொடுப்பனவு வழங்கப்படுமென்ற 2014 வரவு செலவு திட்ட முன்மொழிவு தற்போது நிறைவேற்றப்பட்டுள்ளதா,

(ii) ஆமெனில், மேற்படி கொடுப்பனவு வழங்குதல் ஆரம்பிக்கப்பட்ட திகதி யாது;

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மாவட்ட செயலகங்களுக்கு இணைக்கப்பட்டுள்ள திட்டமிடல் பணிப்பாளர்களுக்கும் தலைமைக் கணக்காளர்களுக்கும் குறைந்த பெறுமதியான ஊக்குவிப்புக் கொடுப்பனவை செலுத்துவதற்கு முன்மொழியப்பட்டமைக்கான காரணங்கள் யாவை;

(ii) குறைந்த கொடுப்பனவொன்றை செலுத்தத் தீர்மானித்தமையினால் மேலே (i) இல் குறிப்பிடப்பட்ட உத்தியோகத்தர்களின் சேவை குறை மதிப்பீட்டுக்கு உள்ளாகியுள்ளதென்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா;

(iii) ஆமெனில், இவர்களது ஊக்குவிப்புக் கொடுப்பனவை அதிகரிக்கச்செய்ய நடவடிக்கை எடுப்பாரா;

(iv) அவ்வாறு அதிகரிக்கப்படும் அளவு எவ்வளவு;

(v) மேற்படி அதிகரிப்பு மேற்கொள்ளப்படும் திகதி யாது

என்பதை அவர் இச்சபையில் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

5225/ '14

கௌரவ அசோக் அபேசிங்க,— நிதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) நெடுஞ்சாலைகள் அபிவிருத்திக்கு உள்நாட்டு வங்கிகள் மூலம் நிதி வழங்கப்படுகின்றதா என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) ஆமெனில், வீதி அபிவிருத்திக் கருத்திட்டங்களுக்காக நிதி வழங்கியுள்ள உள்நாட்டு வங்கிகள் யாவை;

(ii) மேற்படி ஒவ்வொரு வங்கியினாலும் வழங்கப்பட்டுள்ள நிதித் தொகை மற்றும் நிதி வழங்கப்பட்டுள்ள நெடுஞ்சாலைக் கருத்திட்டங்கள் வெவ்வேறாக யாவை

என்பதை அவர் சபையில் சமர்ப்பிப்பாரா?

(இ) வங்கிகள் வழங்கிய நிதியை திருப்பி வங்கிகள் பெற்றுக் கொள்வதற்கான முறையியல் யாது என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

5883/ '15

கௌரவ சாந்த பண்டார,— வெகுசன ஊடக, பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) சுயாதீன தொலைக்காட்சி நிறுவனமானது வெகுசன ஊடக, பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சின் கீழ் உள்ள ஒரு நிறுவனம் என்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) சுயாதீன தொலைக்காட்சி நிறுவனத்திலுள்ள ஊழியர்களின் எண்ணிக்கை யாது;

(ii) 2015 ஆம் ஆண்டில் மேற்படி நிறுவனத்துக்கு புதிய ஊழியர்கள் ஆட்சேர்க்கப்பட்டார்களா

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

5722/ '14

கௌரவ புத்திக பதிரண,— பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மாத்தறை மாவட்டத்தில் அகுரஸ்ஸ, ஹுலன்தாவ தோட்டத்தைச் சார்ந்து வாழ்கின்ற மக்களுக்கு ஆகக்குறைந்த அடிப்படை வசதிகள் கூட இல்லை என்பதையும்;

(ii) இதன் காரணத்தினால் இம்மக்கள் கடும் அசௌகரியங்களை எதிர்நோக்குகின்றனர் என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) ஹுலன்தாவ தோட்டத்தைச் சார்ந்து வாழ்கின்ற மக்களுக்குத் தேவையான குடிநீர், வீதி வசதிகள், வீடமைப்பு மற்றும் சுகாதார வசதிகள் ஆகியவற்றை மேம்படுத்த நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(ii) ஆமெனில், அது எவ்வாறு என்பதையும்;

(iii) இந் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் திகதி யாதென்பதையும்;

(iv) இதற்கென செலவுசெய்ய எதிர்பார்க்கப்படும் பணத்தொகை யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

5884/ '15

கௌரவ சாந்த பண்டார,— பிரதம அமைச்சரும் கொள்கை உருவாக்கம், பொருளாதார அலுவல்கள், சிறுவர், இளைஞர் மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தற்போதைய மத்திய வங்கி ஆளுநரின் பெயர் மற்றும் வசிப்பிடம் யாது;

(ii) மேற்படி மத்திய வங்கி ஆளுநரை நியமித்தவர் யார்

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

## 2015 ஏப்பிறல் 24, வெள்ளிக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

5723/ '14

கௌரவ புத்திக பதிரண,— வெளிநாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) உல்லாசப் பிரயாண வீசா பெற்று இலங்கைக்கு வந்து சட்டவிரோதமாக நாட்டில் தங்கியிருந்துகொண்டு பலவித மதப்பிரசாரங்களில் ஈடுபடுகின்ற பலவித தொழில்களிலும் தொழில் முயற்சிகளிலும் ஈடுபடுகின்ற மற்றும் சமூக விரோத நடவடிக்கைகளுடன் தொடர்புபடுகின்ற உல்லாசப் பிரயாணிகள் எத்தனை பேர் 2014 ஆம் ஆண்டில் கைது செய்யப்பட்டுள்ளனர் என்பதையும்;

(ii) இவர்கள் எந்நாட்டைச் சேர்ந்தவர்கள் என்பதையும்;

(iii) கைது செய்யப்பட்ட இந்த ஒவ்வொரு நபரினாலும் மேற்கொள்ளப்பட்ட சட்ட விரோத நடவடிக்கைகள் மற்றும் வழங்கப்பட்ட தண்டனைகள் வெவ்வேறாக யாவை என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) உல்லாசப் பிரயாண வீசாவில் வந்து சட்டவிரோதமாக நாட்டில் தங்கியுள்ள வெளிநாட்டவர்களை கைது செய்வதற்கான விசேட வேலைத்திட்டமொன்று அமைக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) இவர்கள் தொடர்பாக நடைமுறையிலுள்ள சட்ட வசதிகளைக் கடுமையாக்க நடவடிக்கை மேற்கொள்வாரா என்பதையும்;

(iii) ஆமெனில் அது எவ்வாறு என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

5886/ '15

கௌரவ சாந்த பண்டார,— மக்கள் ஒழுங்கு, அனர்த்த முகாமை மற்றும் கிறித்தவ சமய அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) எமது நாட்டில் மக்கள் ஒழுங்கைப் பாதுகாப்பதற்கு பொலிஸ் திணைக்களத்தின் மூலம் மகத்தான சேவை ஆற்றப்படுகின்றதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) இன்றளவில் பொலிஸ் திணைக்களத்தின் கீழ் சேவையாற்றுகின்ற அனைத்து உத்தியோகத்தர்களினதும் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) மேற்படி உத்தியோகத்தர்களுக்கு தற்போது போதியளவு சம்பளம் பெற்றுக்கொடுக்கப்படுகின்றதா என்பதையும்;

(iii) பொலிஸ் உத்தியோகத்தர்களின் சம்பளத்தை அதிகரிப்பதற்கு எதிர்பார்க்கபப்படுகிறதா என்பதையும்;

(iv) ஆமெனின், அதனை மேற்கொள்ளும் முறை யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

5754/ '14

கௌரவ புத்திக பதிரண,— நீதி மற்றும் தொழில் உறவுகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) போகம்பர சிறைச்சாலையிலிருந்து கைதிகள் அப்புறப்படுத்தப்பட்ட பின்பு அதனைத் துப்புரவு செய்வதற்காக செலவு செய்யப்பட்ட பணத்தொகை யாதென்பதையும்;

(ii) இந்நிதியைப் பெற்றுக்கொண்ட மூலம் யாது என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) போகம்பர சிறைச்சாலை தற்போது எவ்வாறானதொரு அலுவலுக்காக பயன்படுத்தப்படுகின்றது என்பதையும்;

(ii) அதன் உரிமை தனியார் நிறுவனமொன்றுக்கு அல்லது தனிநபர் ஒருவருக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனில், அந்நிறுவனத்தின் அல்லது நபரின் பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம் ஆகியவை யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

5887/ '15

கௌரவ சாந்த பண்டார,— வெகுசன ஊடக, பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2015 ஆம் ஆண்டில் உலக கிண்ண கிரிக்கட் போட்டிகளை நேரடியாக பார்ப்பதற்கு மக்கள் மிக ஆர்வத்துடன் இருந்தனரென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) 2015 உலக கிண்ண கிரிக்கட் போட்டிகளை இந்நாட்டு மக்கள் நேரடியாக பார்க்கும் வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்த தொலைக்காட்சி அலைவரிசை யாதென்பதையும்;

(ii) மேற்படி ஒளிபரப்பு உரிமையை பெற்றுக்கொள்வதற்கு செலவிடப்பட்ட பணத் தொகை எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

5755/ '14

கௌரவ புத்திக பதிரண,— நகர அபிவிருத்தி, நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2010 முதல் 2014 ஆம் ஆண்டு வரை நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை மக்களின் பாவனைக்காக விநியோகித்துள்ள நீரின் அளவு தனித்தனியாக எத்தனை லீட்டர் என்பதையும்;

(ii) தற்போது குழாய் நீர் வசதியை பெற்றுக்கொள்கின்ற மொத்த பாவனையாளர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) மேற்படி பாவனையாளர்களின் எண்ணிக்கை மொத்த சனத்தொகையின் சதவீதமாக எவ்வளவு என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) தற்போது குழாய் நீர் வசதிகளில்லாத, ஆயினும் நீர் வசதி தேவைப்படுகின்ற மக்கள் பற்றிய ஆய்வொன்று நடத்தப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அவ்வெண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) இவர்களுக்கு நீர் வழங்கத் தேவையான நீரின் லீட்டரளவு மதிப்பிடப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) ஆமெனில், அதன் அளவு எவ்வளவென்பதையும்;

(v) மேற்படி நீரின் அளவைப் பெற்றுக்கொள்வதற்குப் போதியளவிலான நீர் மூலகங்கள் நாட்டினுள் உள்ளனவா என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) (i) கடல் நீரை சுத்திகரித்து குடி நீராக மக்களுக்கு வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அத்திட்டங்களை சமர்ப்பிப்பாரா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

5888/ '15

கௌரவ சாந்த பண்டார,— துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தற்போது இலங்கையில் இயங்கி வருகின்ற சர்வதேச துறைமுகங்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) மேற்படி துறைமுகங்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

(iii) மாகம்புர மகிந்த ராஜபக்ஷ துறைமுகத்தை நிர்மாணிப்பதற்காக இதுவரை செலவிடப்பட்டுள்ள பணத் தொகை எவ்வளவு என்பதையும்;

(iv) 2014 ஆம் ஆண்டில் மேற்படி துறைமுகத்தின் ஊடாக ஈட்டப்பட்டுள்ள பணத் தொகை எவ்வளவு என்பதையும்;

(v) தற்போது மேற்படி துறைமுகம் இலாபம் ஈட்டுகின்றதா அல்லது நட்டம் அடைந்துள்ளதா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

# திகதி குறிக்கப்படாத பிரேரணை முன்னறிவித்தல்

*

பிரதம அமைச்சரும், கொள்கை உருவாக்கம், பொருளாதார அலுவல்கள், சிறுவர், இளைஞர் மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சருமானவர்,— 2010 ஆம் ஆண்டிலிருந்தும் அவ்வாண்டின் பின்னரும் பங்குச்சந்தையில் இடம்பெற்ற சந்தேகத்திற்கிடமான அல்லது சட்டவிரோத கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பாக ஆராய்ந்து அறிக்கை செய்வதற்கான பாராளுமன்றத் தெரிகுழு,—

இலங்கையில் பங்குச் சந்தைக் கொடுக்கல்வாங்கல்களின் தன்மை மற்றும் உரிமை தொடர்பாக பாரதூரமான சந்தேகங்கள் எழுந்துள்ளதாலும், அத்துடன்

அரசாங்கத்திலும் வேறு இடங்களிலும் உயர் பதவிகளிலுள்ள சில குறிப்பிட்ட தனிநபர்கள் தொடர்ந்தும் உள்ளாள் வர்த்தகம் மற்றும் முறைகேடான செயல்களில் ஈடுபட்டுள்ளதுடன் தொடர்ந்தும் ஈடுபட்டு வருவதாக அறிக்கை செய்யப்படுவதாலும், அத்துடன்

இந்நிகழ்வுகள் இலங்கையில் பங்குச் சந்தைக் கொடுக்கல்வாங்கல்களில் நம்பகத் தன்மையில் மோசமான விளைவுகளை ஏற்படுத்தும் சாத்தியத்தைக் கொண்டுள்ளமையாலும், அத்துடன்

இதனைச் சீர்படுத்தும் நடவடிக்கைகள் எடுக்கப்படாவிட்டால் இலங்கையில் முதலீட்டாளர் நம்பிக்கை மோசமாகப் பாதிப்படையும் என்பதாலும்,

பின்வருபவை தொடர்பில் விசாரித்து இச்சபைக்கு அறிக்கையிடுவதற்கு பாராளுமன்றத் தெரிகுழுவொன்று நியமிக்கப்படல் வேண்டுமென இச்சபை தீர்மானிக்கிறது.

(அ) 2010 ஆம் ஆண்டிலிருந்தும் அவ்வாண்டின் பின்னரும் பங்குச் சந்தையில் இடம்பெற்ற ஏதேனும் கொடுக்கல்வாங்கல்கள் சந்தேகத்திற்கிடமான அல்லது சட்டவிரோதமான தன்மையைக் கொண்டிருந்ததா, அத்துடன்

(ஆ) இக்காலப்பகுதியில் பங்குச் சந்தையில் உள்ளாள் வர்த்தகத்திற்கான ஏதாவது சான்றுகள் உள்ளனவா, அத்துடன்

(இ) அரசாங்க நிதிகளுடன் சம்பந்தப்பட்ட ஏதேனும் மோசடிக்கான சான்றுகள் உள்ளனவா, அத்துடன்

(ஈ) அவ்வாறாயின், வியாபாரத்திற்கும் அவ்வாறான மோசடிச் செயற்பாடுகளுக்கும் பொறுப்பான தனியாட்கள் யாவர், அத்துடன்

(உ) பங்குச் சந்தையில் வேறு ஏதாவது முறைகேடுகளுக்கான சான்றுகள் உள்ளனவா, அத்துடன்

(ஊ) அவ்வாறாயின், அந்த முறைகேடுகள் யாவை, அத்துடன்

(எ) முறைகேடுகளுக்குப் பொறுப்பான நபர்கள் யார், மேலும்

(ஏ) பங்கு கொடுக்கல் வாங்கல்களைக் கட்டுப்படுத்தும் விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு இடையுறுவதை உறுதிப்படுத்தும் பொறுப்பினைக் கொண்டவர்கள் உடந்தையாயிருந்ததற்கான சான்றுகள் உள்ளனவா, மேலும்

(ஐ) இவ்வாறான உள்ளாள் வர்த்தகம் மற்றும் முறைகேடுகள் எதிர்காலத்தில் மீண்டும் நிகழ்வதைத் தடுப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளும் ஏற்பாடுகளும், அத்துடன்

(ஒ) குழுவின் விசாரணைக்கு இயைபானவை என அதன் தற்றுணிபின் பிரகாரம் தீர்மானிக்கும் அத்தகைய ஏனைய கருமங்கள்.

2. (அ) குழுவும் அதன் தவிசாளரும் சபாநாயகரால் பெயர் குறித்து நியமிக்கப்பட வேண்டும்,

(ஆ) 95ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் எற்பாடுகளினால் தடைபெறாமல் குழு இருபத்தொன்றுக்கு (21) மேற்படாத உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

3. குழு,

(அ) அதன் கூட்ட நடப்பெண்ணைத் தீர்மானிப்பதற்கும்;

(ஆ) ஆட்களை அழைப்பதற்கும் பத்திரங்களையும் பதிவேடுகளையும் கோருவதற்கும் எவரேனும் ஆளை பாராளுமன்றத்தின் முன்னிலையில் அல்லது அத்தகைய குழுவின் முன்னிலையில் சமுகமளிக்குமாறும் அத்தகைய ஆளின் உடைமையில் அல்லது கட்டுப்பாட்டின் கீழ் இருக்கும் பத்திரத்தை, புத்தகப் பதிவை அல்லது ஆவணத்தைச் சமர்ப்பிக்குமாறு கட்டளையிடுவதற்கும்;

(இ) சாட்சிகளின் வாய்மூல விசாரணையின் மூலம் மெய்ப்பிப்பதற்கு அல்லது வேறுவிதமாக உறுதிப்படுத்துவதற்கும் குழுவின் தவிசாளரால் அல்லது அத்தகைய நோக்கத்துக்காக விசேடமாக அதிகாரமளிக்கப்பட்ட ஒரு ஆளினால் நிர்வகிக்கப்படும் சத்தியம் அல்லது உறுதிப்பிரமாணத்தின் மீதமைவாக சாட்சிகளை விசாரிப்பதற்கும்;

(ஈ) சம்பந்தப்பட்ட துறைகளில் உதவுவதற்கு சிறப்பறிஞர்களின் அல்லது நிபுணர்களின் சேவைகளைப் பெறுவதற்கும்; அத்துடன்

(உ) காலத்துக்கு காலம் இடைக்கால அறிக்கைகளை தயாரிக்கவும் ஏதேனும் பாராளுமன்ற ஒத்திவைப்பு மூலம் தடைபெறாமல் கூடுவதற்கும்

தத்துவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

4. குழு அதன் முதலாவது அமர்வுத் தினத்திலிருந்து ஒரு வருடத்திற்குள் அல்லது பாரளுமன்றம் வழங்கக்கூடியவாறான அத்தகைய வேறு அல்லது மேலதிக காலப்பகுதியினுள் அதன் அறிக்கையைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.